அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்:20/2016
தேதி:18.01.2016

# பெட்ரோல், டீசல்

## விலை கூடினால் மக்கள் தலையில் சுமத்துவது!..
## விலை குறைந்தால் பயனை மத்திய அரசு எடுத்துக் கொள்வது!..
## இது நியாயமா?
## சமக நிறுவனர் தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அறிக்கை

சுமார் 40 ஆண்டுகளுக்குப் பிறகு உலகச் சந்தையில் கச்சா எண்ணெயின் விலை மிகுந்த சரிவைக் கண்டுள்ளது. இந்தியா போன்ற வளரும் நாடுகளுக்கு இந்த விலைச் சரிவு ஒரு வரப்பிரசாதமாகும். பெரும்பாலான வளரும் நாடுகள் தங்கள் அந்நியச் செலவாணியை எண்ணெய் இறக்குமதிக்கே அதிகம் செலவிடுகின்றன.

இந்தியாவில் பெட்ரோல்/டீசல்/சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலை உலகச் சந்தையின் விலைகளைப் பொறுத்தே நிர்ணயம் செய்யப்படுகின்றன. கச்சா எண்ணெய் விலை அதிகரிக்கும் போது பெட்ரோலியப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கும் அளவு, கச்சா எண்ணெய் விலை குறையும் போது குறைக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு எழுகிறது. அதுவும் தற்சமயம் சுமார் 40 ஆண்டுகள் இல்லாத அளவு கச்சா எண்ணெய் விலைச் சரிவைக் கண்டுள்ளது.

எனவே அதற்கேற்ற வகையில் இவ்விலைச் சரிவின் பலனை நுகர்வோராகிய பொதுமக்களுக்கு அளிக்க வேண்டும் என்று சமத்துவ மக்கள் கட்சி பலமுறை வலியுறுத்தி வந்துள்ளது. இன்றைய விலை நிலவரப்படி, இந்தியாவில் பெட்ரோலியம் பொருள்களின் விலை தற்போதைய சில்லரை விற்பனை அளவில் பாதி அளவே இருக்க வேண்டும்.

ஆனால் எண்ணெய் நிறுவனங்கள் இது குறித்து பரிசீலனை செய்யவில்லை என்பது ஒருபுறம் இருந்தாலும் கடந்த 4 மாதங்களில் 4 முறை பெட்ரோல்/டீசல் மீதான கலால் வரியை மத்திய அரசு அதிகரித்துள்ளது. இதனால் எண்ணெய் நிறுவனங்கள் கச்சா எண்ணெய் விலைக் குறைவின் பலனை மக்களுக்குத் தரமுடியாமல் போகிறது. எனவே மத்திய அரசு மறைமுகமாக மக்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகையை தடுத்து வருகிறது.

இப்போது பெட்ரோல்/டீசல் விலையை மிகக் கணிசமாகக் குறைத்தால் தான் மீண்டும் விலைகள் உயர நேர்ந்தால் மக்கள் ஓரளவு சகித்துக் கொள்வார்கள். மத்திய அரசு எண்ணெய் நிறுவனங்களுக்கு கொடுமை இழைக்கிறது. இதனால் எண்ணெய் நிறுவனங்கள் மக்களுக்கு கொடுமை இழைக்கின்றன. மொத்தத்தில் கஷ்டப்படுவது பொதுமக்கள் தான்.

எனவே மத்திய அரசு எண்ணெய் நிறுவனங்கள் மீது விதித்திருக்கும் கலால் வரியை ரத்து செய்வதோடு, எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோல்/டீசல் விலைகளை மேலும் குறைக்க வேண்டும் என்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறேன். எண்ணெய் நிறுவனங்களின் லாபத்தை மட்டுமே கருத்தில் கொள்ளாமல் தொழில் வளர்ச்சி, விலைவாசியைக் கட்டுப்படுத்துதல், ஏழை, எளிய நடுத்தர மக்களின் பொருளாதாரச் சுமை இவற்றைக் கருத்தில் கொண்டு பெட்ரோல்/டீசல் விலைகளை தற்போதைய விலையில் பாதி அளவுக்குக் குறைக்க வேண்டும் என்று மத்திய அரசை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்



ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்